நகர சபைகள்

*139 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எத்தனை 1, 2, 3 கிரேட் நகரசபைகள் உள்ளன? ஸ்பெஷல் கிரேட் எத்தனை ?

(இ) அவைகளின் தகுதி தன்மை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) இதற்கான விடை ᵃஅவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இதில் செலக்ஷன் கிரேட் முனிசிபாலிட்டிகள் எவை எவை ? ஸ்பெஷல் கிரேட் முனிசிபாலிட்டிகள் எவை எவை ? இதே போன்று பர்ஸ்டு கிரேடிலே இருந்து செலக்ஷன் கிரேடுக்கும் செலக்ஷன் கிரேடிலேயிருந்து ஸ்பெஷல் கிரேடுக்கும் மாற்றக் கூடிய அளவுக்கு இருக்கக்கூடிய முனிசிபாலிட்டிகள் எவை எவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதிலே சிறப்பு நிலைபெற்ற நகராட்சிகள் மதுரை, கோவை, ஆகியவை தேர்வு நிலை பெற்ற நகராட்சிகள் சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தூத்துக்குடி, உதகமண்டலம் ஆகியவை. மற்றபடி நகராட்சிகளை இருக்கிற நிலையிலிருந்து உயர்த்துவதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. அப்படிப்பட்டவைகள் எவை எவை இப்பொழுது தகுதி பெற்றிருக்கின்றன என்கின்ற விவரம் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, நகர ஈட்டுப்படி கொடுத்தன் மூலம் மதுரையும் சென்னையைப் போல் கருதப்படுகிறது. எனவே சென்னையிலுள்ள நகராட்சியைப்போல மதுரையையும் மாநகராட்சியாக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசினர் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சி ஸ்பெஷல் கிரேடாக ஆக்கக்கூடிய தகுதி 3 வருடங்களுக்கு முன்னதாக பெற்றிருந்தும் அதை நகராட்சி மூலம் கேட்டிருந்தும், இதுவரைக்கும் அது ஸ்பெஷல் கிரேட் ஆக்கப்படாமல் இருப்பதை சர்க்கார் உடனடியாக கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. வ. ஜார்ஜ் : அவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் முனிசிபாலிட்டி, அதை ஸ்பெஷல் கிரேடாக ஆக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்து இருக்கிறதா ? அதை உடனடியாக பரிசீலித்து அதை ஸ்பெஷல் கிரேடாக உயர்த்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த மூலக் கேள்வி பல்வேறு நிலையிலே இருக்கக்கூடிய மாநகராட்சிகளுடைய எண்ணிக்கையைப் பற்றியது. ஆகவே, நாகர்கோவில் முனிசிபாலிட்டியைப் பற்றி தனிப்பட்ட முறையில் கேள்வி கேட்டால் விவரமான பதில் அளிக்கப்படும்.

திரு. எம். எஸ். மணி : சார், இந்த தரம் பிரிக்கப்பட்டது எந்த ஆண்டில் ? நீண்ட ஆண்டுகளுக்கு முன்னாலே தரம் பிரிக்கப்பட்டிருந்தால் அதை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசினருக்கு உண்டா ?

ᵃ 82–83-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1968 மார்ச் 4]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1952-ம் ஆண்டில் மூன்று நிலை நகராட்சிகளாக பிரிக்கப்பட்டது. முதல் நிலை நகராட்சிகள், இரண்டாவது நிலை நகராட்சிகள், மூன்றுவது நிலை நகராட்சிகள் என்று. அதற்குப் பிறகு 1963-ஆம் ஆண்டில் தேர்வு நிலை, சிறப்பு நிலை ஆகியவை பற்றிப் பரிசிலிக்கப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டு அதிலிருந்து இது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகராட்சியில், 115,000 மக்கள் இருக்கிறுர்கள். ஆகவே, அதை தேர்வு நிலை நகராட்சியாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். சுரேந்திரன் : மேட்டூர் நகரத்திலே ஒரு டவுன்ஷிப் கமிட்டி இருக்கிறது. அதிலே பொதுமக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. நகரசபை வரிகள் எல்லாம் செலுத்தப்பட்டு வருகின்றன. அதை உடனடியாக நகர சபையாக மாற்றும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பிரதிநிதித்துவம் இல்லை என்றுர்கள். ஆனல் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிறுர்கள். அதுபற்றி மேற்கொண்டு விவரம் தேவை என்றுல் தனிக்கேள்வி போடவும்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஒரே ஒரு கார்ப்பரேஷன்தான் தமிழ் நாட்டில் இருக்கிறது. மதுரையில் ஒரு கார்ப்பரேஷனை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாளாக இருந்து வருகிறது. அதைப்பற்றி அரசினுடைய கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே இந்தக் கேள்வியின் விடை தரப்பட்டிருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, மனிதர்களில் தான் பல ஜாதிகள் இருக்கின்றன. இந்த நகராட்சி மன்றங்களிலாவது ஒரு நிலை இருக்கக்கூடாதா ? பல நிலைகள் பிரித்திருப்பதை அரசாங்கம் நீக்க முயற்சி எடுக்குமா ? அப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பொருளாதார அடிப்படையிலே தான், மக்கள் தொகை அடிப்படையிலேதான் பல்வேறு விதமான நிலைமைகளை உருவாக்கி இருக்கின்றேம். கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி 500 பேர் இருக்கின்ற ஊராட்சியையும், 20 இலட்சம் மக்கள் இருக்கின்ற நகராட்சியையும் ஒரே பிரிவாக வைக்க வேண்டுமென்பதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்த டவுன்ஷிப் கமிட்டிக்கு தான்-அஃபிஷியலை சேர்மனுக நியமிக்கின்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட எண்ணம் இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, இந்த மக்கள் தொகை கணக்கு (சென்ஸஸ்) 1961-ஆம் ஆண்டு எடுக்கப்பட்டதன் அடிப்படையில் தான் இன்றையதினம் இவைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 1961-க்குப் பிறகு பல நகராட்சிகளில் மக்கள் தொகை ஏராளமாக பெருகி இருக்கிறது. குறிப்பாக, ஆரணி நகராட்சி போன்ற நகராட்சிகளில் 1961-க்குப் பிறகு மக்கள் தொகை ஏறி இருக்கிறது. அப்பொழுது ஆயிரம், இரண்டாயிரம் குறைவாக இருந்ததால் கிரேடை உயர்த்தவில்லை. ஆனல் இப்பொழுது 37,000-க்கு மேற்பட்ட அளவு ஜனத்தொகை பெருகி இருக்கிற காரணத்தாலே, அத்தகைய நகராட்சிகளின் கிரேடை உயர்த்துவதற்கு அரசு முன் வருமா. தலைக்கு 10 ரூபாய் வீதம் வருமானம் அதிகமாக வருகின்ற

காரணத்தால் இன்றையதினம் உள்ள கணக்குப்படி அந்தமாதிரி நகராட்சிகளின் கிரேடை உயர்த்துவதற்கு சர்க்கார் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில்தான் இவைகள் நிர்ணயிக்கப் படுகின்றன. அதை மாற்றி அமைக்க வேண்டுமென்றால் சட்டத்தையே திருத்த வேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, மாநில மட்டத்தில் எத்தனை ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் தகுதியை பெற்றவை. நகராட்சி பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிட்டியாக உயர்வதற்கு தகுதி பெற்றவை என்பவை தொகுதிவாரியாகப் பார்த்து அவைகளை மேல் மட்டத்திற்கு உயர்த்தலாம் என்பதை அரசாங்கம் பரிசீலித்திருக்கிறதா ? அப்படி பரிசீலனை செய்திருந்தால் எத்தனை நகராட்சி பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிட்டியாகின்ற அளவுக்கு இருக்கின்றன. எத்தனை முனிசிபாலிட்டிகள் மாநில மன்ற அளவுக்கு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மூல கேள்விக்குத் தொடர்புள்ள கேள்வியாகக் கேட்டால் பதிலளிக்க வசதியாக இருக்கும். இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த தேர்வு நிலை நகராட்சிகள் எவ்வளவு என்பதைப் பற்றிய விவரம் இந்த அச்சிட்ட அறிக்கையிலே உள்ளது. 100,000 முதல் 250,000 வரையில் மக்கட் தொகை இருந்து, ரூ. 20,00,000-க்கு மேற்பட்ட ஆண்டு வருவாய் உள்ள நகராட்சிதான் தேர்வுநிலை நகராட்சி என்று இருக்கிறது. இப்பொழுது வேலூர் நகரம் $1\frac{1}{2}$ லட்சத்திற்கு மேல் மக்கட் தொகையைக் கொண்டுள்ளது. 20,00,000 ரூபாய்க்கு மேல் வருவாயைக் கொண்டுள்ளது. எப்பொழுதோ அதை தேர்வு நிலை நகராட்சியாக ஆக்கி இருக்க வேண்டும். ஏன் அப்படி செய்யவில்லை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நான் ஏற்கனவே சுட்டிக் காட்டினேன். அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் தரப்படும்.

DR. H. V. HANDE : Madras State Government is giving grants to these municipalities on some basis, probably the criterion is classification, I think. Will the Government tell us the exact basis on which grants are made to these different catergories of municipalities and the Corporation and what is the amount roughly given to the Corporation and the municipalities ? Will the Minister explain this ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : என்னென்ன வகையான மாநகராட்சிகள் இயங்குகின்றன என்பது மூலக் கேள்வி. இந்தத் தகவல்பற்றிய விவரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறுதித் துணை வினா அல்ஹாஜ் பீர் முஹம்மது அவர்கள் கேட்பார்கள்.

ஹாஜி ம. மு. பீர். முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகையைப் பொறுத்தும், வருவாய் பொறுத்தும் நகராட்சி மன்றங்களாக மாற்றுகின்ற சூழ்நிலை இருக்கிறது. வருவாய் குறைவாக இருக்கும் காரணத்தால் வேறுபடுத்தி, பேரூராட்சியாக்க வேண்டும் என்று நகராட்சிகளிடமிருந்து ஏதாவது மனுக்கள் வந்திருக்கிறதா? அதைப்பற்றி அரசு என்ன முடிவு எடுக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மக்கள் தொகை, வருமானம் இரண்டையும் வைத்துத்தான் நகராட்சிகள் அமைக்கப்படுவது முறையாகும். சில இடங்களில் நகராட்சியின் வருமானம் குறைவாக இருந்தால், பேரூராட்சி மன்றமாக மாற்றியமைக்க முறையீடு வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி.

முதலமைச்சரின் உடல் நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம், ஒரு நடைமுறைக் கேள்வி (பாயின்ட் ஆப் ஆர்டர்) எழுப்புவார்கள்.

***திரு. கே. விநாயகம்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு சில நாட்களாகத் தொடர்ந்து கூட்டத்திற்கு வர முடியாமல்—வேண்டுமென்றே இருக்கிறார்கள் என்று சொல்லமாட்டேன்—உடல் நலக்குறைவு காரணமாக—இருக்கிறது. ஆதலால் அவரும் வரவில்லை. நமக்கும் சுவையில்லை. நம்முடைய பட்ஜெட்டை சமர்ப்பித்தது முதல் அமைச்சர்; ஆகவே, அவர்கள் இருந்தால், அவ்வப்பொழுது குறுக்கிட்டு, அந்த அந்த நிலைகளை விளக்கம் செய்து தருவார்கள். இப்பொழுது இங்கே இருப்பவர்கள் சாமர்த்திய சாலிகள் இல்லை என்று நான் சொல்லவில்லை. திறமை உள்ளவர்கள் தான். ஆனாலும் அவர்கள் இல்லை என்றால் நமக்கெல்லாம் மெத்தக் கவலையாக இருக்கிறது. அவர்கள் விஷயத்தில் இந்த மன்றமும் என்னோடு சேரும், முழுவதுமாகச் சேரும், கட்சி வேறுபாடுகள் இன்றி—அரசியல் வேற்றுமை ஒருபுறம் இருக்கலாம், ஆனால் அவர்களுடைய ஆரோக்கியத்தில் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. அவரை நன்கு தான் பாதுகாக்கிறார்கள்; மருத்துவர்களும் கவனிக்கிறார்கள். ஆனால் நான் என்ன நினைக்கிறேன் என்றால், ஒரு "போர்டு ஆப் டாக்டர்ஸ், எக்ஸ்பர்ட் டாக்டர்ஸ்" அமைத்து, திறமையுள்ள மருத்துவர்களை, வேண்டுமென்றால் வெளி மாநிலங்களிலிருந்து கூட தருவிக்கலாம், தவறில்லை. அதற்காக இங்கே உள்ள மருத்துவர்கள் திறமை குறைந்தவர்கள் என்று குறிப்பிடவில்லை. அப்படிச் சொல்வதாக நினைக்க வேண்டாம். என்னுடைய எண்ணம், ஒரு போர்ட் ஆப் டாக்டர்ஸ் போட்டு, அவர்களுடைய உடலை நன்கு பரிசீலித்து, அவர்கள் நல்ல சுகம் அடைந்து சௌகரியமாக திரும்பவும் நம் சட்டசபையில் கலந்து கொள்ளவேண்டும். நாளைய மறுநாள் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய நாளாக இருப்பதால், அன்றைக்கே வந்து, அப்படி அவர்கள் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். வெகு சீக்கிரமாக அவர்கள் வருவதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றனவா என்று அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா உடல் நலம்பற்றி, அவர்கள் நலம் பெறுவதற்காக வேண்டி ஒரு போர்ட் ஆப் டாக்டர்களை, மருத்துவர் குழுவை அமைத்து, மாண்புமிகு முதல் அமைச்சருடைய உடலைப் பரிசோதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகிறார்கள். இப்பொழுது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை டாக்டர்கள் முறைப்படி கவனித்துக்கொண்டு வருகிறார்கள். தொடர்ந்து பல ஆண்டு காலமாகவே அவர்களைக் கவனித்து வருகிற டாக்டர்தான் அவர்களை இப்பொழுதும் கவனித்துக்கொண்டு வருகிறார். நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறார். பெரிய மருத்துவ மனையில், மற்ற மருத்துவர்களுடைய ஆலோசனைகளும், உதவிகளும் பெறத்தக்க முறையில் இருக்கிறது. ஆனால், போர்டு ஆப் டாக்டர்ஸ் என்று அமைத்து, அதன் மூலமாக